# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2150/51 - 2019 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.21

*2150/51 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

திருத்தம்

**வினைத்திறமைச் சேவை விபூஷணம்**

கட்டளைகள்

*1986 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய 412/20 ஆம் இலக்க* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வினைத்திறமைச் சேவை விபூஷணத்திற்கான கட்டளைகளின் நான்காவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பதினோராவது, பன்னிரண்டாவது, பதின்மூன்றாவது, பதினான்காவது மற்றும் பதினைந்தாவது பந்திகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன :

*நான்காவது பந்தி* : இந்த விபூஷணத்திற்கு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையினது போர்வினைச் சேவையில் மொத்தமாக இருபத்தைந்து ஆண்டுகள் திறமையான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன், மேலும் இலங்கை இராணுவத் தரைப்படையின் பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலையில் இருக்க வேண்டும். அத்தோடு இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையினது வினைத்திறமைச் சேவைக்கான வெகுமதி அளிப்பதற்காக வேறொரு பதக்கத்திற்கு வெகுமதி அளித்தல், இதற்கு எந்தவொரு பாதிப்பும் இல்லையென இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*ஏழாவது பந்தி* : பதக்கம் அளிக்கப்பட்டதன் பின்னர் வினைத்திறமைப் பதக்கம் அல்லது வினைத்திறமைச் சேவைப் பதக்கத்திற்காக கணக்கிடப்பட்ட சேவையொன்று இந்த விபூஷணத்திற்காக தகுதி வழங்கக்கூடிய சேவையாக கணக்கிட முடியும் என இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*எட்டாவது பந்தி* : இவ் விபூஷணத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அதிகாரிகள் தகுதியுடையவர்களாக இருத்தல் மற்றும் அந்தப் பதக்கம் கிடைப்பதற்கு முழுமையான தகுதியுடைய வகையில் பரிபூரண தகுதியுடையவர்களாக இருத்தல், அதிகாரிகளின் அந்த சேவைக் காலத்தை இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையின் தளபதியினால் பரிந்துரைக்கப்பட்ட ஆவணத்தை, இறுதியாக இலங்கை இராணுவத் தளபதியினால் அனுமதிக்கப்பட்டிருந்தால் இப்பதக்கத்தை வழங்க முடியும். அவ்வாறு அன்றி தேவையான சகல தகுதியினையும் பெற்றிருந்தாலும் அவ்வாறான அதிகாரிகளுக்கு விபூஷணம் வழங்கப்பட மாட்டாது என இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*ஒன்பதாவது பந்தி* : இந்த வினைத்திறமைச் சேவைப் பதக்கத்தைப் பெறுபவர் தனது வாழ்நாளில் இரண்டாவது தடவையாக அணியவோ அல்லது சூடவோ முடியாது என இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பதினோராவது பந்தி* : இந்த விபூஷணத்தைப் பெற்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் அணியக்கூடிய வகையில் விபூஷணத்தின் சிறிய அளவில் புனர் நிர்மாணமான வினைத்திறமைச் சேவைப் பதக்கத்தின் உரிய அளவின் பாதி அளவு இருக்க வேண்டும் என இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பன்னிரண்டாவது பந்தி* : வினைத்திறமைச் சேவை விபூஷணத்தின் மற்றும் சிறிய புனர் நிர்மாணத்தின்போது முத்திரை இடப்பட்ட வடிவங்களும் அதன் சிற்றுருவக் கட்டளை இலங்கை இராணுவத் தலைமையகத்தில் உரிய அதிகாரி வைத்துக்கொள்ள வேண்டும் என இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பதின்மூன்றாவது பந்தி* : யாதாயினும் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட விபூஷணத்தை நிராகரித்து ஒதுக்குவதற்குப் பாதுகாப்பு இராஜாங்கச் செயலாளர் அல்லது அவரினால் வழங்கப்படுகின்ற சிபாரிசு அடிப்படையில் எனது முத்திரை அல்லது கையொப்பத்துடனான கட்டளையின்படி அந்நபரின் பதக்கத்தை நிராகரித்து ஒதுக்குவதற்கான அங்கீகாரம் எனது பொறுப்பு ஆகும் எனவும், அத்தோடு அவ்வதிகாரத்தைத் தேர்ந்தெடுப்பது எனது பதில் கடமையாளருடைய பொறுப்பாகும் எனவும் அவ்வாறு நிராகரித்து ஒதுக்கியபின் அவருடைய பெயர் பதக்கப் பட்டியலில் இருந்து வெட்டி ஒப்பம் இடவேண்டும் எனவும், ஆனால், சிபாரிசைக் கேட்டு ஒதுக்கிக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பதக்கத்தை வழங்கும் அதிகாரம் எனது அல்லது எனது பதில் கடமையாளருடைய பொறுப்பாகும் எனவும் இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பதினான்காவது பந்தி* : இந்த விபூஷணத்தை வழங்குதல், பறிமுதல் செய்தல் மற்றும் மீண்டும் வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக எனது இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின்படி அனுமதியை இராஜாங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பெற்றுக்கொண்டு இடையிடையே இலங்கை இராணுவத் தளபதியினால் வெளியிடப்படும் சட்டதிட்டங்களின் கீழ் இந்த விபூஷணம் வழங்க முடியுமென இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பதினைந்தாவது பந்தி* : எனது முத்திரை அல்லது கையொப்பத்துடனான கட்டளையின்படி வெளிப்படுத்தப்படும் அறிவித்தல் மூலம் இந்தக் கட்டளைகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அல்லது இதன் வேண்டிய பிரிவு ஒதுக்கிடல், திருத்தல், மேற்படுதல், உருவாக்குதல் அல்லது விடுவிக்கப்படும் அதிகாரம் எனது பதில் கடமையாளருடைய பொறுப்பாகும் எனவும் இத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
*2019, நவெம்பர் 11.*

*12-114/1*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன.

திருத்தம்

**வினைத்திறமைச் சேவை பதக்கம்**

கட்டளைகள்

*1986 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய 412/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வினைத்திறன் சேவை பதக்கத்திற்குரிய வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாம் பகுதி, மற்றும் அங்கு காணப்படும் ஆணைகளுக்கிடையில் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவது மற்றம் பதின்மூன்றாவது பந்திகள் கீழ் காணப்படும் வகையில் திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளது :*

இலங்கை இராணுவ சுயேச்சைப் படையைச் சேர்ந்த ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள் ஆணைபெறாத உத்தியோகத்தர்கள், போர் வீரர்கள் ஆற்றிய சேவை, வினைத்திறமை சேவைக்கான விசேட தரத்தில் கௌரவிக்கப்படுதல் எனது அபிப்பிராயமாகும்.

*நான்காவது பந்தி* : இலங்கை இராணுவ சுயேச்சைப் படையின் தொடர் பட்டியலில் முழுமையாக பதினெட்டு வருடங்கள் வினைத்திறன் சேவைக் காலத்தை நிறைவு செய்திருக்கும் ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள், ஆணைப்பெறாத உத்தியோகத்தர்கள், போர் வீரர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட வேண்டுமென இங்கு கூறப்படும் நிபந்தனைகளுக்கிணங்க அளிக்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்படுகிறது. ஆயின், அவ்வாறு ஆற்றிய சேவை, இலங்கைத் தரைப்படையின் சுசேயச்சைப் படையில் ஆற்றிய வினைத்திறமைச் சேவைக்கான வேறு ஏதாவது பதக்க அளிப்பின் மூலம் முன்னர் கௌரவிக்கப்பட்டு இருத்தலாகாது எனவும் விதித்துரைக்கப்படுகின்றது.

*ஐந்தாவது பந்தி* : இப்பதக்கம் வழங்குவதற்குத் தேவையான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையினது அத்தகைய ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள், ஆணைபெறாத உத்தியோகத்தர், போர் வீரர்கள் ஆகியோருக்கான பதக்கம் அளிக்குகை, பதக்கம் பெறுவதற்கு வேண்டிய தகைமைச் சேவைக் காலம் எந்தக் கூறில் பூர்த்திசெய்யப்பட்டதோ அந்தக் கூறின் கட்டளை அதிகாரி (முனைஞர்) உத்தியோகத்தரால் விதத்துரைக்கப்படுதல் வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்றது. அத்துடன் அத்தகைய விதப்புரை ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் அல்லது ஆணைபெறாத உத்தியோகத்தர் அல்லது போர் வீரர்கள் திறமையும் முழுமை மிக்கவர்கள் எனவும் அத்ததகைய பதக்கத்துக்கு எல்லா வழிகளிலும் அருகதை தரைப்படை முனைஞனால் அணிவகுப்பு முனைஞனாலும் இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையினது தளபதியாராலும் சான்றுப்படுத்தப்பட்டு இறுதியாக உடையவர்களெனவும் தொடர் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமெனவும் விதித்துரைக்கப்படுகின்றது.

*ஆறாவது பந்தி* : இலங்கைத் தரைப்படை சுயேச்சைப் படையினது சேமப்படையில் உள்ள ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள், ஆணைப்பெறாத உத்தியோகத்தர்கள், போர் வீரர்கள் ஆகியோர் அவர்கள் சேமப்படையில் வைக்கப்பட்டபோது பதக்கத்துக்குத் தேவையான தகைமைச் சேைவையினைக் கொண்டிருந்தார்களாயின் இப்பதக்கத்தைக் கோருவதற்கு உரித்துடையவரென விதித்துரைக்கப் படுகின்றது. ஆயின், இத்தகைய சேவை இலங்கைத் தரைப்படையின் சுயேச்சைப் படையில் வினைத்திறமைச் சேவைக்கான பிறிதொரு பதக்கத்தை அளிப்பின் பொருட்டு கணிப்புக்கு எடுக்கப்படாதிருந்தால் அவ் அதிகாரிகள் இப்பதக்கத்தைப் பெறுவதற்கு தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை விதித்துரைக்கப்படுகின்றது.

*ஏழாவது பந்தி* : பதக்கம் அளிக்கப்பட்ட பின்னர் ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள், ஆணைப்பெறாத உத்தியோகத்தர், போர் வீரர்கள் தமது வாழ்நாளில் இரண்டாம் தடவையாக இப்பதக்கத்தையும், இணைப்பு பட்டையும் மீளவளிப்பதற்கு அனுமதி இல்லை என்பதை விதித்துரைக்கப்படுகின்றது.

*எட்டாவது பந்தி* : பகுதியில் காட்டப்பட்டிருக்கும் ஒழுங்குவிதிகள் இதன் மூலமாக இரத்துச்செய்யப்படுகிறது.

*ஒன்பதாவது பந்தி* : பதக்கம் அளிக்கப்பெறும் ஆணைச்சீட்டு உத்தியோகத்தர்கள், ஆணைபெறாத உத்தியோகத்தர்கள், சில வைபவங்களின் போது அணியப்படக்கூடிய வினைத்திறமைச் சேவைப் பதக்கத்தினதும் பட்டையினதும் சிற்றுருவக் கட்டளை மாதிரிகள் முறையே வினைத்திறமைச் சேவைப் பதக்கத்தினது பட்டைகளினதும் அரைப்பகுதியாக இருத்தல் வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்றது.

*பத்தாவது பந்தி* : வினைத்திறமைச் சேவைப் பதக்கத்தினதும் அதன் சிற்றுருவங்களதும் பட்டையினதும் கட்டளை மாதிரிகள் இலங்கைத் தரைப்படையின் தலைமை அலுவலகத்தில் உரிய அதிகாரியினாலும் வைத்துப் பேணப்படுதல் வேண்டும்.

*பதினோராவது பந்தி* : யாரேனும் நபருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பதக்கத்தை பட்டையின் அளிப்பை இல்லாதாக்குவதற்கும் ஒழிப்பதற்கும் பாதுகாப்புச் செயலாளரால் அல்லது அவர் மூலம் செய்யப்படும் சிபாரிசின் மூலம் எவரேனும் ஓர் ஆள் தொடர்பில் அமைந்த பதக்கத்தின் பட்டையின் அளிப்பை இல்லாதாக்குவதற்கும் ஒழிப்பதற்கும் தகுதியுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகுதியை தேர்ந்தெடுக்கப்பெற்ற எனது பின்னவர்களில் ஒருவருக்கு அத்தகைய சிபாரிசு மீளப் பெறப்படுமிடத்து தகுதியுடையவராக வேண்டும். அவ்வாறு இல்லாதாக்கி ஒழித்த பின்னர் அவரது பெயர் அத்தகைய அளிப்புகள் பதியப்படும் இடாப்பிலிருந்து அகற்றப்பட வேண்டுமெனவும், ஆனால் எனக்கு அல்லது தேர்ந்தெடுக்கப்பெற்ற எனது பின்னவர்களில் ஒருவருக்கு, அத்தகைய சிபாரிசு மீளப்பெறுமிடத்து பதக்கத்தை அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பட்டைகளை மீளவளிப்பதற்குத் தகுதியுடையதாதல் வேண்டுமெனவும் விதித்துரைக்கப்படுகின்றது.

*பன்னிரண்டாவது பந்தி* : இப்பதக்கம் உரிமைப் பறிமுதல், மீளளிப்பு ஆகியவற்றுக்கும் ஏனைய விடயங்களுக்கும் பாதுகாப்புச் செயலாளர் மூலம் தெரியப்படுத்தப்பெறும், எனது அங்கீகாரத்துடன் எனது பிரகடனத்தில் எனது அனுமதியைப் பாதுகாப்புச் செயலாளரிடம் பெற்று அதை இராணுவப் படைத் தளபதியிடம் இடைக்கிடையில் ஒழுங்குவிதிகளுக்கமைய பட்டைகள் வழங்கப்படல் வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்றது.

*பதின்மூன்றாவது பந்தி* : எனது முத்திரை அல்லது கையொப்பத்துடனான கட்டளையின்படி வெளிப்படுத்தப்படும் அறிவித்தல் மூலம் இந்தக் கட்டளைகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அல்லது இதன் வேண்டிய பிரிவு ஒதுக்கிடல், திருத்தல், மேற்படுதல், உருவாக்குதல் அல்லது விடுவிக்கப்படும் அதிகாரம் எனது பதில் கடமையாளருடைய பொறுப்பாகும் எனவும் இத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2019, நவெம்பர் 11.

12-114/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.